சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:–31.12.2021

## சாதாரணக்கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, பிலவ வருடம் மார்கழி மாதம் 16–ஆம் நாள் (டிசம்பர் திங்கள் 31–ஆம் நாள்:–31.12.2021) வெள்ளிக் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பாதாள சாக்கடை திட்ட புதை சாக்கடைப் புழைகளை (Manhole) சாலை மட்டத்திற்கு உயர்த்தும் பணி உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2.00 இலட்சத்தில் மேற்கொள்ள 02.12.2021 அன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றன.

1. திரு.த.தமிழ்ராஜன், ஆண்டிப்பட்டி – 0.03% மதிப்பீட்டை விட குறைவு
2. திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி – 0.01% மதிப்பீட்டை விட அதிகம்

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள திரு.த.தமிழ்ராஜன், ஆண்டிப்பட்டி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3061/2021/இ1).**

**தீர்மான எண், நாள்** **429 , நாள்.31.12.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.2**

இந்நகராட்சிக்குச் சொந்தமான நகராட்சி அலுவலகம், நகர் நல மையம், தலைமை நீரேற்று நிலையம் மற்றும் பள்ளிக் கட்டிடங்கள் ஆகிய பகுதிகளில் உள்ள மின்விளக்குகள் பழுதடைந்துள்ளது. எனவே அவசர அவசியம் கருதி உடன் சரி செய்ய ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.110500/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்படி செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **430, நாள்.31.12.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.3**

சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டப்படும் கட்டிட இனஙகளுக்கு நகராட்சியில் மூலம் கட்டிட அனுமதி வழஙகுவதற்கு உரிய விதிமுறைகளின்படி கட்டிட வரைபடம் சமர்ப்பிக்கும் பொருட்டு 01.12.2021 ஆம் தேதிய விண்ணபத்தில் திரு.ச.அருண்குமார், சின்னமனூர் என்பவர் புதியதாக கட்டிட வரைபட பொறியாளர் Grade-III நிலையில் பதிவு செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார்.

மேற்படி வரப்பெற்ற விண்ணபத்தாரரின் அசல் சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டதின் அடிப்படையில், அன்னாரை கட்டிட வரைபட பொறியாளர் (Grade-III) நிலை–III-ஆக தமிழ்நாடு ஒருஙகிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019–இன்படி (அரசு ஆணை எண்.(எம்.எஸ்) 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை, நாள்.04.02.2019) பதிவு செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4548/2021/எப்1)**

**தீர்மான எண், நாள்** **431 , நாள்.31.12.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.4**

இந்நகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் வார்டு எண்.3, சாமிகுளம் மற்றும் வார்டு எண்.5, வாரச்சந்தை தெற்குப் பகுதியில் உள்ள நுண்ணுயிர் உரமையஙகளுக்கு கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.1,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. பேட்டரி மூலம் இயஙகும் வாகனஙகளுக்கு சார்ஜ் பாயிண்ட்
2. தொட்டிகள் மற்றும் முகப்பு பகுதிகளில் பெயர் பலகைகள்
3. தண்ணீர் ஒஸ் பைப்கள்
4. போர்வெல் பழுது பணிகள்
5. மோட்டார் பழுது பணிகள்
6. சாமிகுளத்தில் உள்ள நுண்ணுயிர் மையத்திற்கு மறைப்பு பணிகள்

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்படி செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **432 , நாள்.31.12.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.5**

இந்நகராட்சியில் அம்மா உணவகம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் அம்மா உணவகத்தில் மாவு அரைக்க பயன்படுத்தப்படும் கிரைண்டர் வாங்கி ஏழு வருடங்கள் ஆன காரணத்தினால் பழுது ஏற்பட்டு இயக்க முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே பொது மக்களுக்கு உணவு வழங்க 5Ltr மாவு அரைக்கும் கிரைண்டர் ஒரு எண்ணம் புதியதாக வாங்க ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.35,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் நிர்வாக அனுமதி வழஙகலாம்.**
**2. மேற்படி செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**
**3. தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.4988/2021/இ1)**

**தீர்மான எண், நாள்** **433 , நாள்.31.12.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.6**

இந்நகராட்சியில் அம்மா உணவகம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் அம்மா உணவகத்தில் மாவு அரைக்க பயன்படுத்தப்படும் கிரைண்டர் வாங்கி ஏழு வருடங்கள் ஆன காரணத்தினால் பழுது ஏற்பட்டு இயக்க முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே பொது மக்களுக்கு உணவு வழங்க 5Ltr மாவு அரைக்கும் கிரைண்டர் ஒரு எண்ணம் புதியதாக வாங்க 23.12.2021ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. M/s Sri Ramavilas Vessels Stores, Chinnamanur – Rs.32640/-
2. M/s Jeyam Metals, Chinnamanur – Rs.33600/-
3. M/s Sri Murugan Metal, Chinamanur – Rs.34000/-

**அலுவலகக் குறிப்பு:–** **1.மேற்காணும் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s Sri Ramavilas Vessels Stores, Chinnamanur என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.**

**2.தனி அலுவலர்மற்றும் ஆணையாளரின் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.4988/2021/இ1)**

**தீர்மான எண், நாள்** **434, நாள்.31.12.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.7**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவுப் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலமாக துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.2185/பி3/2016, நாள்.31.08.2016ன்படி 01.08.2016 முதல் 31.07.2019 முடிய அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி அனுமதி காலத்திற்கு பின்பு திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வது சம்மந்தமாக கடந்த 03.06.2019ம் அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு, அதனடிப்படையில் மேற்கண்ட அலுவலகத்தில் இருந்து தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள அனுமதி கோரி ந.க.2790/2019/அ3, நாள்.03.07.2019ம் தேதிய கடிதப்படி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட உத்திரவு கிடைக்கும் வரை சின்னமனூர் நகராட்சி பொது மக்களின் சுகாதார நலன் கருதி இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.0576/2015/எச்1ன்படி 01.08.2019 முதல் 31.12.2021 வரை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி உத்திரவை எதிர்நோக்கி ஒப்பந்தக்காலம் நீட்டிப்பு செய்து உத்திரவிடப்பட்டது.

இந்நகராட்சியில் கொரோனா தொடர்பாக பணிகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருவதாலும், மேலும் தினந்தோறும் உருவாகும் திடக்கழிவுகளை சேகரித்தல், சேகரிக்கப்பட்ட திடக்கழிவுகளை தரம் பிரித்தல், மக்கும் மற்றும் மக்காத திடக்கழிவுகளை பாதுகாப்பாக கொண்டு சேர்த்தல் போன்ற காரணங்களுக்காகவும், பொது சுகாதாரம் மற்றும் பொது மக்கள் நலன், சுற்றுச் சுழல் பாதுகாப்பு, தினந்தோறும் பொது மக்களிடமிருந்து வருகின்ற குறைகளை களையவும் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவை எதிர்நோக்கி மூன்று மாத காலத்திற்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.367, நாள்.23.09.2021–இன்படி அக்டோபர் 2021 முதல் டிசம்பர் 2021 வரை ந.க.0576/2015/எச்1, நாள்.30.09.2021–இன் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின்படி பணிபுரியும் நிறுவனத்தின் பணியாளர்கள் மூலம் தூய்மைப் பணி செய்ய நீட்டிப்பு செய்து உத்திரவு வழுங்கப்பட்டது.

இந்நிலையில் 31.12.2021–உடன் ஒப்பந்தக்காலம் நீட்டிப்பு முடிவடைவதாலும், இந்நகராட்சி பகுதியில் கொரோனா (Covid-19) தொற்று பரவல் தாக்கும் அபாயம் இருப்பதாலும், மேற்கண்ட திடக்கழிவு பணியினை செயல்படுத்த வேண்டிய சூழல் உள்ளதாலும், அவசர அவசியம் மற்றும் கொரோனா தொற்று தடுப்பு பணியில் ஈடுபடவேண்டிய அவசர சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இச்சூழ்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்திரவு எதிர்நோக்கியும் திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் மூலமாக மேலும் (01.01.2022 முதல் 31.03.2022 வரை) மூன்று மாத காலத்திற்கு அதே விலை விகிதத்தில் பணி நீட்டிப்பு வழுங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **பொது சுகாதாரம் மற்றும் கொரோனா தொற்று தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே பணி உத்திரவு வழுங்கிய திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர் மூலமாக மேலும் மூன்று மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0576/2015/எச்1)** |
| **தீர்மான எண், நாள்** | **435, நாள்.31.12.2021** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.8**

சின்னமனூர் நகராட்சிக்கு மூலதன மான்ய நிதி (Capital Grant Fund) 2021–2022–ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ், வார்டு எண்.2, இராதாகிருஷ்ணா ரைஸ்மில் தெருவில் அமைந்துள்ள 3.99 MLD கொள்ளளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஆன்லைன் வழி தொடர்ச்சியான கழிவுநீர் கண்கானிப்பு அமைப்பு (Online Continious Effluent Monotring System) நிறுவும் பணியினை ரூ,40.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்வதற்கு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித எண்.17021–2 /2021/EA-1, நாள்.14.12.2021 கடிதத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.5050/2021/இ1)** |
| **தீர்மான எண், நாள்** | **436, நாள்.31.12.2021** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.9**

இந்நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள 23 எண்ணம் மின் விளக்குகள் பழுதடைந்துள்ளதை சரி செய்ய ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.27000/—த்தில் பணிகள் மேற்கொள்ள 30.11.2021 அன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றன.

1. M/s Sadaiyandi Agencies, Aundipatti – ஒரு எண்ணம் ரூ.1043/–
2. M/s K.S.P.Electricals, Theni – ஒரு எண்ணம் ரூ.1055/–

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:—** | **மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள M/s Sadaiyandi Agencies, Aundipatti என்பவரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.4238/2021/இ1).** |
| **தீர்மான எண், நாள்** | **437, நாள்.31.12.2021** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.10**

சின்னமனூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.2, கண்ணம்மாள் கார்டனிலிருந்து தேசிய நெடுஞ்சாலையானது தேனி—குமுளி சாலை பெட்ரோல் பங்க் வரை உள்ளது. இதில் தேசிய நெடுஞ்சாலை கீ.மீ.255+900—இல் உள்ள மார்க்கையன்கோட்டை பிரிவிலிருந்து குச்சனூர் செல்லும் சாலை சந்திப்பில் தேசிய நெடுஞ்சாலை துறையினரால் (NHAI) 1 எண்ணம் உயர்கோபுர மின் விளக்கு (High Mast Light) அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி உயர்கோபுர மின்விளக்கு அமைப்பதற்கு டேவணித் தொகை உள்ளிட்ட இதர செலவுகள் அனைத்தும் தேசிய நெடுஞ்சாலைத் துறையினரால் (NHAI) மின் வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. மேலும் அமைக்கப்பட்டுள்ள உயர்கோபுர விளக்கு உள்ளாட்சித் துறையினரால் பராமரிக்கப்பட வேண்டும் எனவும், மாதாந்திர மின் கட்டணம் சம்மந்தப்பட்ட உள்ளாட்சித் துறையினரால் செலுத்தப்பட வேண்டும் எனவும் மேற்படி துறையின் 27.10.2021ம் நாளிட்ட NHAI/PIU/DGL/DTK/NH-45(E)&220/2021/2049, எண் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அமைக்கப்பட்டுள்ள ஒரு எண்ணம் உயர்கோபுர மின் விளக்குக்கு உபயோகப்படுத்தப்படவுள்ள மின்சாரத்திற்கு, மின் வாரியத்தினால் எழுப்பப்படும் மாதாந்திர மின் கட்டணத்தினை சின்னமனூர் நகராட்சியிலிருந்து செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:—** | **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2469/2021/இ1)** |
| **தீர்மான எண், நாள்** | **438, நாள்.31.12.2021** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.11**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில், பொது சுகாதாரப் பணியாளர்களுக்கு பயன்படுத்தப்படும் கிருமி நாசினிகள், கொரோனா தடுப்பு சாதனங்கள் மற்றும் தளவாட பொருட்கள் கையிருப்பு இல்லை. மேலும் டெங்கு தடுப்புப் பணிகள், கொரோனா தடுப்புப் பணிகள், தெருக்கள் மற்றும் பொது இடங்களில் கிருமி நாசனம் செய்வதற்கும் கிருமி நாசினிகள், கொரோனா தடுப்பு சாதனங்கள் மற்றும் தளவாட பொருட்கள் சுத்தம் செய்தவற்கும் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டும், கீழ்க்காணும் பொருட்கள் வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.10 இலட்சம் மேற்கொள்ளவும் மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>**தேவைப்படும் பொருட்கள்**</u>

<u>**கிருமி நாசினிகள், கொரோனா தடுப்பு சாதனங்கள்**</u>

| | | |
|---|---|---|
| 1. | கருப்பு பினாயில் | 500 லிட்டர் |
| 2. | வெள்ளை பினாயில் | 500 லிட்டர் |
| 3. | கழிப்பறை சுத்தம் செய்யும் ஆசிட் | 100 லிட்டர் |
| 4. | கழிப்பறை சுத்தம் செய்யும் திரவம் | 100 லிட்டர் |
| 5. | லெமன் கிராஸ் பிளவர் சோப் ஆயில் | 100 லிட்டர் |
| 6. | ரூம் பிரஸ்னர் | 10 லிட்டர் |
| 7. | லெமன் கிராஸ் ஆயில் | 100 லிட்டர் |

<u>**தளவாட பொருட்கள்**</u>

| | | |
|---|---|---|
| 1. | அலுமினிய கூடை | 60 எண்ணம் |
| 2. | இரும்பு தட்டு | 30 எண்ணம் |
| 3. | பிக்காஸ் | 6 எண்ணம் |
| 4. | தென்னைமார் | 500 எண்ணம் |
| 5. | மூங்கில்தப்பை தெரு கூட்டுமார் | 100 எண்ணம் |
| 6. | மண்வெட்டு சவல் | 6 எண்ணம் |
| 7. | சாக்கடை கரண்டி | 60 எண்ணம் |
| 8. | குப்பை அள்ளும் தகடு | 100 எண்ணம் |
| 9. | சாக்கடை சுத்தம் செய்யும் முள் | 60 எண்ணம் |

**அலுவலகக் குறிப்பு:—** **மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **439, நாள்.31.12.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.12**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில், பொது சுகாதாரப் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் கிருமி நாசினிகள், கொரோனா தடுப்பு சாதனங்கள் கையிருப்பு இல்லை. மேலும் டெங்கு தடுப்பு பணிகள், கொரோனா தடுப்பு பணிகள், தெருக்கள் மற்றும் பொது இடங்களில் கிருமி நாசினி செய்வதற்கும் கிருமி நாசினிகள், கொரோனா தடுப்பு சாதனங்கள் சுத்தம் செய்வதற்கும் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டும், கீழ்க்காணும் பொருட்கள் வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.7.80 இலட்சத்தில் மேற்கொள்ளவும் மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>கிருமி நாசினிகள், கொரோனா தடுப்பு சாதனங்கள்</u>**

1. நீர்த்த சுண்ணாம்புத்தூள் – 50.00 MT
2. பிளிச்சீங் பவுடர் – 5.0 MT

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **440, நாள்.31.12.2021**

**தீர்மானம்**

*******

## பொருள் எண்.13

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் , பொதுசுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்படும் பாதுகாப்பு உபகரணங்கள் கையிருப்பு இல்லை மேலும், டெஙகு தடுப்பு பணிகள், கொரோனா தடுப்பு பணிகள், மேற்கொள்ளும் பொருட்டு பாதுகாப்பு உபகரணங்கள் பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டும் , கீழ்காணும் பொருட்கள் வாஙகவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.5.00/– இலட்சத்தினை மேற்கொள்ளவும் மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தேவைப்படும் பொருட்கள்**

**பாதுகாப்பு உபகரணஙகள்**

| | | |
|---|---|---|
| 1. | கெமிக்கல் ஃபேஷ் புரூப் மாஸ்க் | 2 எண்ணம் |
| 2. | ரப்பர் கை உரை | 100 எண்ணம் |
| 3. | சிந்தடிக் கை உரை | 200 எண்ணம் |
| 4. | காட்டன் + சிந்தடிக் பிக்ஸ்டு கை உரை | 500 எண்ணம் |
| 5. | காலுரை | 60 எண்ணம் |
| 6. | மழை கோட்டு | 60 எண்ணம் |
| 7. | ரிப்லெக்டர் ஜாக்கெட் | 60 எண்ணம் |
| 8. | பாதுகாப்பு நைலான் தொப்பி | 60 எண்ணம் |
| 9. | ரெக்சின் கேப் | 60 எண்ணம் |
| 10. | PPE Kit Full Fled (Coat, Gloves, Mask, Cap) | 100 எண்ணம் |
| 11. | ஸ்பிரேயர் (12 லிட்டர் கொள்ளளவு) | 3 எண்ணம் |
| 12. | கை கழுவும் திரவம் | 10 எண்ணம் |
| 13. | Digital Thermometer | 10 எண்ணம் |
| 14. | லைசால் | 200 லிட்டர் |
| 15. | சானிடைசர் | 10 லிட்டர் |
| 16. | சர்சகிள் மாஸ்க் 3 பிளை | 10000 எண்ணம் |
| 17. | Pulse Oximeter | 10 எண்ணம் |
| 18. | ஃபேஸ் ஷீல்டு | 100 எண்ணம் |
| 19. | கோவிட் – 19 Bio Medical Waste Collection Yellow Bag-Bid | 50 எண்ணம் |

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **441, நாள்.31.12.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.14**

இந்நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021–22–இன் கீழ், வார்டு எண்.2, கண்ணம்மாள் கார்டனில் பூங்கா அபிவிருத்திப் பணிகள் தொகை ரூ.69.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மற்றும் இந்நகராட்சிக்குட்பட்ட விரிவாக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மண்சாலையினை தார்சாலையாக மாற்றி அமைக்கும் பணிக்கு ரூ.186.35 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 30.11.2021ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரி மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கிலம் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு தொகை ரூ.1,39,230–ஐ M/s Moulis Advertising Service Pvt Ltd., Chennai அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3533/2021/இ1).**

**தீர்மான எண், நாள்** **442, நாள்.31.12.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.15**

இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் 4 கணினிகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான UPS 0.5 KVA (2 Nos) பயன்படுத்துவதால் மின் இணைப்பு துண்டிக்கப்படும் போது தேவையான அளவு Backup கிடைப்பதில்லை. ஆகையால் புதிய UPS and Battery உடன் வாங்கவும், மேலும் கணினி வசூல் மையத்தில் உள்ள UPS and Battert பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதாலும், அதனை சரி செய்யவும் இயலாது என்று சர்வீஸ் இன்ஜினியர் சான்று அளித்திருப்பதால் கணினி வசூல் மையத்தில் உள்ள UPS and Battery –ஐ கொடுத்து விட்டு கீழ்க்கண்ட விவரப்படி புதிய UPS and Battery வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,30,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**New UPS and Battery Description**

1. 3.00 KVA ONLINE UPS – 1No
2. 1.00 KVA ONLINE UPS -1 No
3. 100 AH and 12V Exide Tubuler Batteries – 11 Nos

**Old UPS and Battery**

1. ONLINE 5 KVA – AARGEE Model 9000 and Serial No.902K 8103
2. 6 EL 60 Exide Tubuler Battery – 10 Nos

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்படி செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3169/2021/இ1).**

**தீர்மான எண், நாள்** **443, நாள்.31.12.2021**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.16**

இந்நகராட்சி பகுதிகளில் உள்ள குடிநீர் பகிர்மானக் குழாய்கள் மற்றும் குடிநீர் பிரதானக் குழாய்களில் ஏற்படும் நீர் கசிவுகளை சரி செய்வதற்கு குடிநீர் உபகரணங்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.40,000/– மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.**<br>**2.மேற்படி செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4871/2021/இ2)** |
| **தீர்மான எண், நாள்** | **444, நாள்.31.12.2021** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.17**

இந்நகராட்சி பகுதிகளில் உள்ள குடிநீர் பகிர்மானக் குழாய்கள் மற்றும் குடிநீர் பிரதானக் குழாய்களில் ஏற்படும் நீர் கசிவுகளை சரி செய்வதற்கு குடிநீர் உபகரணங்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.32,000/– மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1.மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.**<br>**2.மேற்படி செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4872/2021/இ2)** |
| **தீர்மான எண், நாள்** | **445, நாள்.31.12.2021** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.18**

சின்னமனூர் நகராட்சிக்கு 2019–20–ஆம் ஆண்டுக்கு தேனி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.9.20 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட ஸ்ரீ பூலானந்தீஸ்வரர் கோவில் வளாகத்தில் 16 மீட்டர் ஹைமாஸ்ட் லைட் (8 Nos x 200 Watts) அமைக்கும் பணி மேற்கொள்ள தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் 22.12.2021ம் தேதிய ந.க.2420/2019/தி6 எண்ணிட்ட செயல்முறை உத்திரவின்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.4651/2021/இ1)** |
| **தீர்மான எண், நாள்** | **446, நாள்.31.12.2021** |
| **தீர்மானம்** | |

*******